THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 27th March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Questions 211, 212, 349, 350, 351 and 352 are postponed since the Hon. Minister concerned is indisposed.

மதுரையில் பெண்களுக்கு அரசினர் கலைக் கல்லூரி

*343 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரத்தில் பெண்களுக்கு என ஒரு தனி கலைக் கல்லூரி ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : It has been decided to open a Government Arts College for Women at Madurai during 1965–66.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரையில் ஆரம்பிக்கும் பெண்கள் கல்லூரியில் பெண்களுக்குத் தனிச்சிறப்புவாய்ந்த குடும்பக்கலை—ஹோம் சைன்ஸ் பட்டப்படிப்பு பாடமாக இருக்குமா ? அல்லது கணிதம், பௌதிகம் போன்றவைகள் பாடமாக இருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹோம் சைன்ஸும் இருக்கலாம் அசல் சைன்ஸும் இருக்கலாம். இரண்டும் மாணவிகள் விரும்பி படிக்கக்கூடியதுதான்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தனிப்பட்ட நபர்கள் அங்கே பெண்கள் கல்லூரியைத் தொடங்கவேண்டுமென்றால் அதற்கு ஆதரவு கொடுப்போம் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு கல்லூரி ஏற்படுத்துவதற்கு மனுக்கள் வந்திருக்கிறதா ? அப்படியானால் அது இந்தக் கல்லூரிக்குத்தானா அல்லது வேறு எந்தக் கல்லூரிக்காவது வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் மனுக்கள் வரவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தக் கல்லூரி ஆரம்பிக்கும்போது பி.யூ-ஸி. வகுப்பு மாத்திரம் இருக்குமா ? அல்லது பி.ஏ. பி.எஸ்.ஸி., வகுப்புகள்கூட இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆரம்பத்தில் பி.யூ.சி. மாத்திரம் இருக்கும்.

திரு. ஆ. துரையரசன் : புதுக்கோட்டையில் பெண்களுக்கு ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்று கனம் முதலமைச்சருக்கு ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதைத் துவக்குவதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. ஆனல் அதில் அக்கறையுள்ள மக்கள் ஓரளவிற்கு உதவியளிக்க முன்வந்தால் மேலும் கவனிக்கப்படும்.

Anicut across river Kushasthali, Tiruttani taluk

* 344 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) Whether estimates have been prepared to complete the work of the anicut across the river Kushasthali where the water is diverted to Poonimangadu irrigation tanks in Tiruttani taluk, Chingleput district;

(b) if so, when the work would be taken up for execution; and

(c) if not, the reasons for the delay?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes. The anicut which was taken up for construction by the Government of Andhra Pradesh, was handed over to this State before completion. An estimate for completing the anicut at a cost of Rs. 30,500 has been prepared by this Government.

(b) & (c) The work has not yet been taken up for execution, pending a decision on the question of apportionment of expenditure on repairs between the Andhra Pradesh Government and this Government.

(அ) ஆம். ஆந்திரப் பிரதேச அரசாங்கத்தால் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த அணைக்கட்டு கட்டிப் பூர்த்தியாவதற்கு முன்பு அது இம் மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ரூ. 30,500 செலவில் இந்த அணைக்கட்டு வேலையைப் பூர்த்தி செய்வதற்கான மதிப்பீட்டை இந்த அரசாங்கம் தயாரித்துள்ளது.

(இ) & (உ) மராமத்துக்கள் சம்பந்தமான செலவை ஆந்திரப் பிரதேச அரசாங்கமும், இந்த அரசாங்கமும் பகிர்ந்துகொள்வதைக் குறித்து இன்னும் முடிவு செய்யாததால், இவ்வேலையை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளவில்லை.